டிஜிட்டல் டெய்லி

# அக்ரி-டாக்டர்

agridoctor.in

agridoctor.in | 1.10.2024 செவ்வாய்க்கிழமை | பக்கங்கள் 29 | RNI No.TNTAM/2012/49602 | Vol.12, Issue : 088 - Madurai | Online Edition

கல்யாண் ஜுவல்லர்ஸ்

# இன்று 9 மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்பு!

## சென்னை வானிலை மையம் தகவல்

சென்னை, செப்,30

தமிழகத்தில் 6ம் தேதி வரை கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட முன்னறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, குமரிக்கடல் மற்றும் தமிழக பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது.



இதன் காரணமாக இன்று 1.10.24ல் தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும். கோயம்புத்தூர் மாவட்ட மலைப்பகுதிகள், நீலகிரி, ஈரோடு, கிருஷ்ணகிரி, தர்மபுரி, திருப்பத்தூர் மற்றும் சேலம் மாவட்டங் களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

நாளை 2.10.24ல் தமிழகத்தில் ஒரு சில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். கோயம்புத்தூர் மாவட்ட மலைப்பகுதிகள், நீலகிரி, தேனி, திண்டுக்கல், ஈரோடு, கிருஷ்ணகிரி, தர்மபுரி, திருப்பத்தூர் மற்றும் சேலம் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

நாளை மறுநாள் 3.10.24ல் தமிழகத்தில் ஒரு சில இடங் களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும். கடலூர், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடு துறை, புதுக்கோட்டை மற்றும் ராமநாதபுரம் மாவட்டங்களில் மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

4.10.24ல் தமிழகத்தில் ஒரு சில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும். குறிப்பாக, செங்கல்பட்டு, விழுப்புரம், கடலூர், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, இராமநாதபுரம், புதுச்சேரி, மயிலாடுதுறை மற்றும் காரைக்கால் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யவாய்ப்புள்ளது.

5 மற்றும் 6ம் தேதிகளில் தமிழகத்தில் ஒரு சில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளை பொறுத்தவரை, அடுத்த 24 மணி நேரத்திற்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப் படும். நகரின் ஒரு சில பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய லேசானது/மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில்

## சிறுதானியங்களிலிருந்து மதிப்பூட்டப்பட்ட உணவுப் பொருட்கள் தயாரிக்கும் பயிற்சி

கோயம்புத்தூர், செப்.30

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் சிறுதானியங்களிலிருந்து மதிப்பூட்டப்பட்ட உணவுப் பொருட்களைத் தயாரிக்கும் பயிற்சி 3.10.24 மற்றும் 4.10.24 ஆகிய நாட்களில் டைபெறும். சிறுதானிய வகைகளான கேழ்வரகு, கம்பு, சோளம், சாமை, தினை, பனிவரகு போன்றவை மக்களால் உணவில் ஓரளவு சேர்த்துக் கொள்ளப்படுகிறது. நகர்ப்புறங்களில் கேழ்வரகு மட்டும் பயன்பாட்டில் உள்ளது. சிறுதானிய வகைகளில் உள்ள சத்துக்களையும் அவற்றை உபயோகித்து தயாரிக்கப்படும் கீழ்க்காணும் மதிப்பூட்டப்பட்ட தொழில் நுட்பங்கள் பற்றிய பயிற்சி அளிக்கப்படவுள்ளது. அவையாவன

- பாரம்பரிய உணவுகள்
- பிழிதல்
- அடுமனைப் பொருட்கள்
- உடனடி தயார்நிலை உணவுகள்

ஆர்வமுள்ளவர்கள் ரூ.1,770,- (ரூ.1500/- + GST 18%)- பயிற்சி முதல் நாளன்று செலுத்த வேண்டும்.

பயிற்சியானது காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை, அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையம், வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், (வாயில் எண். 7, மருதமலை சாலை வழி) கோயம்புத்தூரில் நடைபெறும்.

மேலும் விபரங்களுக்கு பேராசிரியர் மற்றும் தலைவர், அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையம், வேளாண்மைப் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் - 641 003. அலைபேசி எண் : 94885 18268, தொலைபேசி எண் : 0422-6611268, மின்னஞ்சல் : phtc@tnau.ac.in தொடர்பு கொள்ளலாம்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

# கிளைரிசிடியா தென்னந்தோப்பிற்கு ஏற்ற ஒரு பசுந்தழை உரம்

ஒரு தென்னை மரத்திற்கு ஆண்டு தோறும் 0.34 கிலோ நைட்ரஜன் சத்து முக்கியமாக தேவைப்படுகிறது. கரிம உரம் குறிப்பாகப் பசுந்தாள் உரம் நைட்ரஜனை வழங்கக் கூடியதாக திகழ்கிறது. பெரும்பாலான தென்னை மரங்கள் தமிழ்நாட்டிலும், இந்தியாவின் பிற இடங்களிலும் உள்ள மணற்பாங்கான கரையோர மண்ணில் வளர்க்கப்படுகிறது. இந்த வகை மண்ணில் அங்ககப் பொருட்களானது மிகக் குறைவாக இருக்கும்.




எனவே, தென்னை மரங்களுக்குப் பசுந்தாள் உரமிடுதல் மிகவும் முக்கியமானதாகும். தென்னந்தோப்புகளில் பசுந்தாள் உரத்தை வளர்ப்பதற்கான வாய்ப்பு மிகவும் குறைவாக உள்ளது.

**கிளைரிசிடியா ஏன் தென்னைக்கு ஏற்ற பசுந்தழை உரம்?**

- கிளைரிசிடியா தென்னந்தோப்புகளில் குறிப்பாக வரப்புகளில் எளிதில் வளரும்.
- இது அனைத்து வகையான மண்ணிலும், மலை சரிவு களிலும், மணல் நிறைந்த கடற்கரை சமவெளிகளிலும், தாழ்வான வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட களிமண் பகுதிகளிலும் நன்றாக வளரும்.
- இது தோட்டங்களிலும், அதன் எல்லைகளிலும் வேலி செடி யாக நடலாம். இது பசுந்தழை உரம் கொடுப்பதோடு வேலியாகவும் பயன்படுகிறது.
- தென்னந்தோப்புகளின் எல்லைகளில் வளர்க்கப்படும் கிளை ரிசிடியா 3 ஆண்டு வளர்ச்சிக்குப் பிறகு தென்னை மரங்களுக்கு உரமிடுவதற்கு போதுமான பசுந்தழை இலைகளை அளிக்கின்றன.
- கிளைரிசிடியா இலைகள் மிக விரைவில் சிதைந்து மண்ணில் உரமாக எளிதில் சேரும் பண்புடையது. கிளைரிசிடியா ஒரு முழுமை யான உரமாகும். இதன் இலைகளில் அதிகளவு நைட்ரஜன் உள்ளது. தவிர சில பொட்டாஷ் மற்றும் பாஸ்பாரிக் அமிலமும் உள்ளது. தென்னை சாகுபடியில் கிளைரிசிடியாவை வழக்கமான உரமாகச் சேர்ப்பதன் மூலம் உரச்செலவை கணிசமாகக் குறைக்கலாம்.
- கிளைரிசிடியா மிக விரைவில் மண்ணில் மக்குவதால் மண் வளம் அதிகரித்து நன்மை செய்யும் நுண்ணுயிரிகள் அதிகளவில் பெருக்கமடைந்து மண்ணில் வாழும் நோய்க் காரணிகளைக் கட்டுப் படுத்துகின்றது. இதனால் தென்னையில் வாடல் நோய் ஏற்படுவதை தடுக்கிறது. மண்ணில் புதைக்கப்பட்ட கிளைரிசிடியா 17 நாட்களில் மக்கி அதன்ளவில் பாதியாகிவிடும்.பத்து நாட்களில் மக்கி தழைச் சத்து உரமாக கிடைக்கிறது. தழைச்சத்து, பொட்டாசியம் மற்றும் கால்சியம் ஆகிய சத்துக்கள் மிக விரைவில் அதாவது 28 வது மற்றும் 60 வது நாட்களில் முறையே வெளிப்படுகின்றன.

**கிளைரிசிடியா ஓர் இயற்கை உரம்**

700 மீட்டர் நீளமுள்ள கிளைரிசிடியாவினை வளர்க்கும் போது ஆண்டு ஒன்றுக்கு எக்டருக்கு 300 கிலோ தழைச்சத்து கிடைக் கின்றது. மேலும், கால்சியம், மெக்னீசியம் போன்ற சத்துக்கள் கிளைரிசிடியாவிலிருந்து வெளிப்பட்டு அமிலத் தன்மை உள்ள மண் வகைகளில் அலுமினியத்தின் நச்சுத் தன்மையைக் குறைகின்றது. இவ்வாறு இரசாயன உங்களுக்கு மாற்றாகப் பயன்பட்டுச் சுற்றுச் சூழலுக்கு நண்பனாக திகழ்கிறது என சேலம் மாவட்டம், வீரபாண்டி வேளாண்மை உதவி இயக்குநர் பா.கார்த்திகாயினி கூறியுள்ளார்.

## கோவை ஆர்.எஸ்.புரம் உழவர் சந்தை விலை விபரம் 30.09.2024

| வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் | வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | கத்திரி(Hybrid) | 30 | 34 | 56 | காளான் (சிப்பிபட்டன்)200GM | 35 | 40 |
| 1A | கத்திரி(Simron) | 30 | 36 | 57 | உருளை (பிற) | 36 | 40 |
| 1B | கத்திரி(Nadu) | 45 | 50 | 57A | உருளை(ஊட்டி) | 50 | 54 |
| 2 | வெண்டை | 25 | 30 | 58 | மேரக்காய் | 20 | 24 |
| 3 | தக்காளி (நாடு) | 32 | 35 | 59 | முள்ளங்கி(சிவப்பு) | 28 | 32 |
| 4 | தக்காளி ஆப்பிள் | 29 | 32 | 60 | கேரட் | 50 | 54 |
| 5 | அவரை(பிஸ்கட்) | 40 | 45 | 61 | பீட்ரூட் (ஊட்டி) | 45 | 48 |
| 6 | புடலை | 22 | 26 | 62 | நூல்கோல் | 40 | 46 |
| 7 | பீர்க்கன் | 25 | 28 | 63 | டர்னிப் | 45 | 50 |
| 8 | சுரைக்காய் | 16 | 20 | 64 | மு.கோஸ் | 18 | 22 |
| 9 | பாகற்காய் | 30 | 34 | 65 | மு.கோஸ்(கலர்) | 30 | 35 |
| 10 | கொத்தவரை | 25 | 28 | 66 | காளிபிளவர் | 50 | 54 |
| 11 | பூசணி | 12 | 16 | 67 | பட்டாணி | 190 | 200 |
| 12 | அரசாணி | 12 | 16 | 68 | பூண்டு | 260 | 314 |
| 13 | ப.மிளகாய்(சம்பா) | 25 | 30 | 69 | இஞ்சி | 50 | 136 |
| 14 | ப.மிளகாய்(Bullet/Nadu) | 28 | 32 | 70 | புருக்கோலின் | 100 | 120 |
| 15 | சி.வெங்காயம் | 45 | 50 | 71 | பென்னி பீன்ஸ் | 55 | 58 |
| 16 | பெ.வெங்காயம் | 46 | 60 | 72 | குடமிளகாய் | 48 | 55 |
| 17 | த.பயறு(வெள்ளை) | 25 | 28 | 73 | ஊட்டி அவரை | 130 | 145 |
| 18 | பச்சை மொச்சை | 42 | 46 | 74 | பஜ்ஜி மிளகாய் | 35 | 40 |
| 19 | முருங்கை | 70 | 76 | 71A | | | |
| 20 | தேங்காய் | 54 | 57 | | | | |
| 21 | | | | | | | |
| 22 | வாழைக்காய் | 35 | 40 | | | | |
| 23 | சேனைகிழங்கு | 60 | 65 | | | | |
| 24 | கருணைகிழங்கு | 90 | 95 | 75 | எலுமிச்சை | 125 | 130 |
| 25 | சேப்பங்கிழங்கு | 55 | 58 | 76 | கொய்யா (வெள்ளை/சிவப்பு) | 50 | 65 |
| 26 | மரவள்ளி | 30 | 34 | 77 | | | |
| 27 | சர்க்கரைவள்ளி | 50 | 55 | 78 | பப்பாளி | 35 | 40 |
| 28 | கறிவேப்பிலை | 40 | 45 | 79 | மாதுளை | 200 | 240 |
| 29 | கொத்தமல்லி | 50 | 55 | 80 | திராட்சை | 70 | 80 |
| 30 | புதினா | 9 | 10 | 81 | மாம்பழம் | 0 | 0 |
| 31 | அகத்திக்கீரை | 12 | 15 | 82 | ஆப்பிள் / காலா | 200 | 240 |
| 32 | தண்டுக்கீரை | 12 | 15 | 83 | ஆரஞ்சு | 90 | 100 |
| 33 | சுக்கிட்டி&வெந்தயம் | 18 | 20 | 84 | சாத்துக்குடி | 40 | 45 |
| 34 | அரைக்கீரை | 12 | 15 | 85 | அன்னாசி பழம் | 60 | 70 |
| 35 | சிறுகீரை | 12 | 15 | 86 | சீதாப்பழம் | 45 | 50 |
| 36 | பாலாக்கு | 12 | 15 | 87 | முலாம்பழம் | 50 | 55 |
| 37 | பருப்புக்கீரை | 12 | 15 | 88 | தர்பூசணி | 15 | 20 |
| 38 | முருங்கைக்கீரை | 8 | 10 | 89 | | | |
| 39 | வல்லாரை | 8 | 10 | 90 | கதளி | 65 | 70 |
| 40 | கோவக்காய் | 25 | 28 | 91 | பூவன் | 45 | 50 |
| 41 | வாழைத்தண்டு | 5 | 10 | 92 | ரஸ்தாளி | 55 | 60 |
| 42 | வாழை இலை | 4 | 5 | 93 | கற்பூரவள்ளி | 55 | 60 |
| 43 | வாழைப்பூ | 10 | 15 | 94 | மோரிஸ் | 34 | 38 |
| 44 | முட்டைகோஸ் (உள்ளூர்) | 18 | 22 | 95 | நாடன் | 45 | 50 |
| 45 | வெள்ளரி | 30 | 34 | 96 | நேந்திரன் | 30 | 35 |
| 46 | பீட்ரூட் (உள்ளூர்) | 25 | 28 | 97 | செவ்வாழை | 80 | 85 |
| 47 | சுண்டக்காய் | 140 | 150 | 98 | பேரிக்காய் | 120 | 160 |
| 48 | வெங்காயத்தாள் | 8 | 10 | 99 | நார்த்தங்காய் | 40 | 45 |
| 49 | | | | 100 | கறிப்பலா | 35 | 40 |
| 50 | நிலக்கடலை | 60 | 64 | 101 | டிராகன் ப்ரூட் | 150 | 160 |
| 51 | மக்காச்சோளக்கதிர் | 24 | 28 | 102 | நெல்லிக்காய் | 70 | 80 |
| 52 | | | | | | | |
| 53 | ஸ்வீட் கான் | 35 | 40 | | | | |
| 54 | இளநீர்(சிறியது/பெரியது) | 30 | 33 | | | | |
| 55 | முள்ளங்கி(வெள்ளை) | 35 | 38 | | | | |

# நெற் பயிரில் துத்தநாக சல்பேட் இட்டு மகசூல் இழப்பை தவிர்ப்பீர்!

சிவகங்கை, செப்.30

சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் சுப கமலா தேவி கூறிய செய்தி குறிப்பில் நெற்பயிர் மண்ணில் உள்ள தழைச்சத்தை சரியாக உறிஞ்சி எடுக்கவும் அதன் பயன்பாட்டுத்திறனை அதிகரிக்கவும் துத்தநாக சத்து மிகவும் அவசியமாகும். நெற்பயிரில் துத்தநாக சத்து மண்ணின் நீர் பிடிப்பு தன்மையை அதிகரிக்கச் செய்யும். மேலும் குறைந்த வெப்பநிலையை தாங்கும் தன்மையை பயிருக்கு அளிக்கும்.




மண்ணில் சுண்ணாம்பு தன்மை அதிகம் இருந்தால் துத்தநாக சத்து பயிருக்கு கிடைக்காத நிலை ஏற்படும். இதனால் பயிர் வளர்ச்சி குன்றி இலைகள் மஞ்சள் நிற கோடுகள் கொண்டதாக மாறி ஒளிச்சேர்க்கை நடப்பதை தடுக்கும். பின்பு பயிர்கள் காய்ந்து விடும், இதனால் விளைச்சலும் குறையும்.

இவற்றை நிவர்த்தி செய்ய ஏக்கர் ஒன்றுக்கு 10 கிலோ சிங் சல்பேட் அல்லது 5 கிலோ நெல் நுண்ணூரம் கடைசி உழவுக்குப் பின் 20 கிலோ மணலுடன் கலந்து ஒருமுறை இட வேண்டும் துத்தநாகசத்து பற்றாக்குறை அறிகுறிகள் அதிகமாக காணப் படுமாயின் ஒரு லிட்டர் நீரில் 5 கிராம் துத்தநாக சல்பேட்டை கலந்து கைத்தெளிப்பான் மூலம் நெற்பயிரின் இலைகளில் நன்குப்படும்படி தெளிக்க வேண்டும்.

துத்தநாக சல்ஃபேட் மற்றும் நெல் நுண்ணுயிரங்கள் 50 சதவீத மானியத்தில் தேவகோட்டை வட்டாரத்தில் உள்ள வேளாண்மை விரிவாக்கம் மையங்களில் கிடைக்கிறது. விவசாயிகள் வாங்கி பயன்பெறலாம்.


Stanes
BIO NEMATON
Bio Pesticide
Paecilomyces lilacinus
பயோ நெமட்டான்
பயிரின் வேர்களை தாக்கும் நூற்புழு பிரச்சனையா?
பயன்படுத்துவீர்...
பயோ நெமட்டான்
"நூற்புழுக்களின் எதிரி"
இது வேர்களைத் தாக்கும் தீமை செய்யும் நூற்புழுக்களையும் அதன் முட்டைகளின் செயல்பாட்டையும் தடுக்கிறது.
அரோக்கியமான வேர் வளர்ச்சிக்கு உதவுகிறது.
பூஞ்சாண (அ) பாக்டீரியா நோய்கள் வரும் அபாயத்தை குறைக்கிறது.
மேலும் நல்ல மகசூல் கிடைக்க வழிவகை செய்கிறது.
வேர் முடிச்சுகள்
வேர் வீக்கம்
வேர் அழுகல்
டி ஸ்டேன்ஸ் அண்ட் கம்பெனி லிமிடெட்
8/23-24, ரேஸ் கோர்ஸ்,
கோவை-641018.
www.tstanes.com
84899 04949
தமிழ்நாடு மேலாளர் : 91 93449 14955
கோவை, ஈரோடு : 91 93449 14956
சேலம் : 91 93449 14948
திருச்சி : 91 93449 14943
மதுரை : 91 93449 14935
வேலூர் : 91 93449 14938

# திருச்சி மாவட்ட விவசாயிகளுக்கு கண்டுணர்வு சுற்றுலா




திருச்சி, செப்.30

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும் சிறுமணி வேளாண்மை அறிவியல் நிலையத்தின் மூலம் பல்வேறு பயிற்சிகள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்வுகள் நடத்தப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக, கோயம்புத்தூர் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக வளாகத்தில் மாநில அளவிலான உழவர் தின விழா நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையம் சார்பில் விவசாயிகள் 26, 27, 28 ஆகிய மூன்று நாட்களும் கண்டுணர்வு சுற்றுலா அழைத்துச் செல்லப் பட்டனர்.

இந்த கண்டுணர்வு சுற்றுலாவில் பல்வேறு மாவட்டங்களில் உள்ள தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும் வேளாண் மற்றும் தோட்டக்கலை ஆராய்ச்சி நிலை யங்கள், வேளாண் அறிவியல் நிலையங்கள், அரசு சார்ந்த வேளாண் நிறுவனங்கள் மற்றும் வேளாண் தனியார் நிறுவனங் களால் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த பல்வேறு நவீன வேளாண் தொழில்நுட்பங்கள், இயற்கை பூச்சிக் கொல்லிகள், பயிர் வளர்ச்சி ஊக்கிகள், மேம்படுத்தப்பட்ட வேளாண்மை உழவு மற்றும் நடவு கருவிகளை நேரில் கண்டு பயனடைந்தனர்.

இந்த பெருவிழாவில் பல்வேறு மாவட்டங்களை சேர்ந்த அனுபவமிக்க விவசாயிகள் மற்றும் விஞ்ஞானிகள் தங்களது மேலான அனுபவப் பூர்வமான வேளாண் கருத்துக்களை பகிர்ந்து கொண்டனர். ஏறத்தாழ 300 வேளாண் தொழில் நிறுவனங்கள், உழவர் உற்பத்தியாளர் கூட்டமைப்புகள் மற்றும் தொழில் முனைவோர் கண்காட்சி மற்றும் கருத்துக்காட்சி அரங்கம் முழுவதும் காட்சிப்படுத்தப்பட்டது.

மேலும், இந்நிகழ்ச்சியில் வேளாண்மையின் நவீன கண்டு பிடிப்புகள், இரகங்கள் மற்றும்தொழில் நுட்பங்கள், வேளாண் இடுபொருள்கள் மற்றும் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள் காட்சிப் படுத்தப்பட்டன.

இந்நிகழ்ச்சியில் திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த 300க்கும் மேற்பட்ட விவசாயிகள் மற்றும் தொழில் முனைவோர்கள் வேளாண் அறிவியல் நிலையம் மற்றும் கரும்பு ஆராய்ச்சி நிலையம் சார்பில் பங்கு பெற்று பயனடைந்தனர். இந்த கண்டுணர்வு சுற்றுலாவை வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் மற்றும் கரும்பு ஆராய்ச்சி நிலைய இணைப்பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் சி.ராஜாபாபு தலைமையில் கேவிகே மற்றும் கரும்பு ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானிகள் மற்றும் அலுவலர்கள் ஒருங்கிணைத்தனர்.



# வேளாண் விரிவாக்க மையங்களில் பணமில்லா பரிவர்த்தனை – வாலாஜா வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் தகவல்



இராணிப்பேட்டை, செப்.30

இராணிப்பேட்டை மாவட்டம், வாலாஜா வட்டாரத்தில் அமைந்துள்ள வேளாண் விரிவாக்க மையத்தில் பணமில்லா பரிவர்த்தனை செயல்படுத்தப்படுவதாக, வாலாஜா வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் திலகவதி, தெரிவித்துள்ளார்.

உழவர் நலத்துறை அமைச்சர், சட்டமன்றத்தில் 2022-23 ஆண்டுக்கான வேளாண்மை நிதிநிலை அறிக்கையில், வேளாண்மை விரிவாக்க மையங்களில் புதிய மின்னணு தொழில்நுட்பங்களை பயன்படுத்தி பணமில்லா பரிவர்த்தனை முறை செயல்படுத்தப்படும் என்ற அறிவிப்பினை வெளியிட்டார்.

அதனை தொடர்ந்து விவசாயிகள் வேளாண்மை விரிவாக்க மையங்களில் இடுபொருட்களை பெறும் போது தங்களது பங்களிப்பு தொகையை, இ-செலான், கிரெடிட் கார்டு, டெபிட் கார்டு, ஒருங்கிணைந்த பணப்பரிவர்த்தனை (யு.பி.ஐ), மூலம் செலுத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது.

வேளாண் விரிவாக்க மைய பணியாளர்கள் பணமில்லா பரிவர்த்தனை முறையை செயல்படுத்துவதற்கான பயிற்சியும் வழங்கப்பட்டு, விற்பனை இட கருவிகள் மூலம் பண பரிவர்த்தனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

வாலாஜா வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தில் செயல்படுத்தப்படும் இந்த பணமில்லா பரிவர்த்தனை நடைமுறைகளை வாலாஜா வட்டாரத்தில் உள்ள அனைத்து விவசாயிகளும் பயன்படுத்தி பயனடையலாம் என வாலாஜா வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் திலகவதி, தெரிவித்து உள்ளார்.


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
JAIN HI-TECH PLANT FACTORY
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# உலக காபி தினம் இன்று!



காபி ஒரு மலைத்தோட்டபயிர். இதனுடைய பழம் சிவப்பு நிறத்தில் காணப்படும். நம்நாட்டில் அராபிகா மற்றும் ரொபஸ்டா என்ற இரு வகை காபி வகைகள் பயிரிடப்படுகின்றன. இது 500 முதல்1500 மீட்டர் உயரமான மலைப்பகுதியில் சாகுபடியாகிறது.

**காபி எப்படி உலகிற்கு அறிமுகமானது?**

ஆப்பிரிக்கா நாடுகளில் ஒன்றான எத்தியோப்பியாவில் வாழ்ந்த பழங்குடியின மக்களின் வாயிலாக வெளி உலகிற்கு தெரிய வந்தது. இங்கிருந்து துருக்கி, ஏமன், வட ஆப்பிரிக்கா, ஐரோப்பியா மற்றும் அமெரிக்கா நாடுகளுக்கு பரவியது.

**காபிக்கு காபி என பெயர் வர காரணம் என்ன?**

காபி விதைகள் (காபிக்கொட்டை) ஆடுகளின் குளம்பு வடிவத்தை ஒத்திருப்பது போல உள்ளதால், இதனை பிரெஞ்சு மொழியில் ‘ஹுப்‘ என்று அழைத்தனர். அது நாளடைவில் இதிலிருந்து மருவி ‘காபி‘ (COFFEE) யாக மாறி விட்டது. காபிக்கு தமிழில் ‘குளம்பி‘ என்ற பெயர் உண்டு.

**காபி எப்படி இந்தியாவிற்கு வந்தது தெரியுமா?**

1670யில் இஸ்லாமிய துறவியான பாபாபுடின் என்பவர் மெக்கா விற்கு புனித யாத்திரை ‘மேற்கொண்டு திரும்பி வரும்போது ஏமன் நாட்டிலிருந்து 7 காபி விதைகளை எடுத்து வந்தார்.

அவற்றை கர்நாடக மாநிலத்தில், குடகு மலைப் பகுதியில் உள்ள சந்திரகிரி மலைப்பகுதியில் நடவு செய்தார். இன்றும் இப்பகுதி இவர் பெயரால் அழைக்கப்படுகிறது. தற்போது இந்தியாவில் காபி உற்பத்தியில் கர்நாடகம் முதலிடத்தில் வகிக்கிறது. காபி ஏற்றுமதியில் இந்தியா ஏழாவது இடம் வகிக்கிறது.

**காபியின் வகைகள் தெரியுமா?**

பிளாக் காபி, பில்டர் காபி, கூல் காபி, மல்லி காபி மட்டுமே நமக்கு தெரிந்தது. ஆனால் நமக்கு தெரியாத வகைகளும் உள்ளன. லிக்கர் காபி (மது கலந்தது) பிராட்போ காபி, பாம்பன் கபேலேட்டா, பீரிட்டோ, டர்கிஷ் காபி, ஐரிஸ் காபி போன்ற வகைகளும் உள்ளன.

**சர்வதேச காபி தினம் எப்போது அறிவிக்கப்பட்டது?**

கடந்த 1963யில் லண்டனை தலைமை இடமாக கொண்டு, சர்வதேச காபி அமைப்பு (INTERNATIONAL COFFEE FORUM) 70க்கு மேற்பட்ட நாடுகளுடன் அமைக்கப்பட்டது. 2014யில் இந்த அமைப்பு இத்தாலியில் உள்ள மிலன் நகரில் கூடிய அக்டோபர் 1ந் தேதியை 'உலக காபி தினமாக' அறிவித்து நாடு முழுவதும் கொண்டாடப்பட்டு வருகிறது.

உலக அளவில் பெட்ரோலுக்கு அடுத்தபடியாக காபிக்கு, மிகப்பெரிய வணிக சந்தை உள்ளது. இந்தோனேஷியாவில் கோபி லுவாக், தாய்லாந்தின் பிளாக் ஐவரி காபி, பனாமாவின் எஸ் மரால்டா காபி உலக அளவில் சுவையிலும் அதிக விலையில் முதல் இடம் பெறும் காபி வகைகளாகும்.

**தமிழகத்தில் காபி ஆராய்ச்சி நிலையம் எங்குள்ளது?**

தாண்டிக்குடியில் (திண்டுக்கல் மாவட்டம்) மத்திய காபி ஆராய்ச்சி நிலையம் உள்ளது நம்மில் பலருக்கு தெரியாத நிலைதான்.

**காபி குடிப்பதால் உண்டாகும் நன்மைகள் என்ன?**

பலரும் காலை எழுந்தவுடன் அருந்துவது 'பெட் காபி'. இது இல்லாமல் அவர்கள் தூக்கத்தை விட்டு வெளியேற மாட்டார்கள். அந்த அளவுக்கு காபிக்கு அடிமையாக பலர் உள்ளனர்.

காபியில் உள்ள காபின் நமக்கு உற்சாகமளித்து, மனச் சோர்வை நீக்குகிறது. மூளை நரம்பு மண்டல செயல்பாட்டை அதிகரித்து, பார்க்கின்சன் நோய் மற்றும் பக்கவாதம் ஏற்படும் அபாயத்தை குறைக்கிறது.

காபி குடிப்பதால் சில நன்மைகள் இருந்தாலும்கூட, தீமைகள் இருக்கத்தான் செய்கிறது. உடல் நலத்திற்கேற்ப அளவோடு பருகுவது நல்லது.

இன்று நாம், ஏன் உலகமே தண்ணீருக்கு அடுத்த படியாக பருகுவது காபி தான். நமக்கு மனச்சோர்வை நீக்கி புத்துயிர் கொடுக்கும் காபியை பருகுவோம், உற்சாகமாக பணிகளை மேற் கொள்ளுவோம்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

தலைக் கவசம் உயிர்க் கவசம்

# இப்கோ- முற்றிலும் நீரில் கரையும் உரங்கள்

**யூரியா பாஸ்பேட் (17:44:0)**

யூரியா பாஸ்பேட்டில் 17% தழைச்சத்தும், 44% மணிச்சத்தும் உள்ளது.

**பயன்படுத்தும் முறை**

ஒரு லிட்டர் நீருக்கு 5 கிராம் கலந்து பயிரின் வளர்ச்சி பருவங்களில் (கிளைப்பு/ தூர்விடும்பருவம்) 15 நாட்கள் இடைவெளியில் 1-2 முறை தெளிக்கவும்.

**மோனோ அமோனியம் பாஸ்பேட் (12-61-0)**

மோனோ அமோனியம் பாஸ்பேட்டில் 12% தழைச்சத்தும், 61% மணிச்சத்தும் உள்ளது.

**பயன்படுத்தும் முறை**

ஒரு லிட்டர் நீருக்கு 10-15 கிராம் கலந்து பயிரின் வளர்ச்சி பருவங்களில் (கிளைப்பு/ தூர்விடும்பருவம்) 15 நாட்கள் இடைவெளியில் 1-2 முறை தெளிக்கவும்.

**மோனோ பொட்டாசியம் பாஸ்பேட் (0:52:34)**

மோனோ பொட்டாசியம் பாஸ்பேட்டில் 52% மணிச்சத்தும், 34% சாம்பல்சத்தும் உள்ளது.

**பயன்படுத்தும் முறை**

ஒரு லிட்டர் நீருக்கு 10-15 கிராம் கலந்து பூக்கும் பருவத்திற்கு முன் மற்றும் பூக்கும் பருவத்திற்கு பின் 2-3 முறை தெளிக்கவும்.

**நன்மைகள்**

- அமிலத்தன்மை கொண்ட யூரியா பாஸ்பேட், மணிச்சத்து மற்றும் நுண்ணூட்டச் சத்துகள் கிடைக்கும் தன்மையை அதிகரிக்கும்.









● பயிர்களின் முளைப்பு திறன் மற்றும் வேரின் வளர்ச்சியை அதிகரிக்கிறது.

● பழங்களின் நிறம், தரம் மற்றும் பளபளப்பு தன்மைக்கு உதவுகிறது.

● பூக்கள் உதிர்வதை தடுத்து பயிர்களின் தரம் மற்றும் உற்பத்தியை அதிகரிக்கும்.

● பூச்சிகள் மற்றும் நோய்களுக்கு எதிரான நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கிறது.

- ADVT.

# விவசாயிகளுக்கு இயற்கை விவசாயம் குறித்த விழிப்புணர்வு சுற்றுலா



மதுரை, செப்.30

மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம் வட்டாரத்தில் 2024-25 ம் ஆண்டு இயற்கை வேளாண்மை குறித்த மாநில அளவிலான விவசாயிகள் கண்டுணர்வு பயணம் நடந்தது.

திருப்பரங்குன்றம் வட்டாரம் அட்மா திட்ட ஒருங்கிணைப்பாளர் மீனாட்சி சுந்தரம் துவக்கி வைத்தார். இதில் திருப்பரங்குன்றம், திருமங்கலம், செல்லம்பட்டி, உசிலம்பட்டி வட்டார 50 மற்றும் விவசாயிகள் பங்கேற்றனர்.

இக்கண்டுணர்வு பயணம் தேனி மாவட்டம், சென்டெக்ட் வேளாண்மை அறிவியல் மையம் மற்றும் ஆராய்ச்சி நிலையம் ஒருங்கிணைப்பாளர் மகேஸ்வரன் பல்வேறு வகை இயற்கை பூச்சி விரட்டிகள் தயாரித்தல், மண்புழு உரம் உற்பத்தி கம்போஸ்ட் உரம் உற்பத்தி பஞ்சகாவியா, மீன் அமிலம், உயிர் உரம் பயன்படுத்தும் முறைகள் போன்ற தொழில்நுட்பங்கள் குறித்து விளக்கி கூறினார். மண்ணியல் துறை பேராசிரியர் அருண் ராஜ் இயற்கை முறையில் மண் வளங்களை மேம்படுத்துதல் பயிர் நுண்ணூட்டங்களை பயன்படுத்தும் முறைகள் மண் மேலாண்மை தொழில் நுட்பங்கள் குறித்து விளக்கினார். விவசாயிகள் பல்வேறு விளக்கங்களை கேட்டு தெரிந்து கொண்டனர். இக்கண்டுணர்வு பயணத்திற்கான ஏற்பாடுகளை தொழில்நுட்ப மேலாளர் லதா, உதவி தொழில்நுட்ப மேலாளர் அழகர் செய்திருந்தனர்.


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில்

# விதை பந்துகள் தயாரித்தல்–உலக சாதனை நிகழ்வு

கோயம்புத்தூர், செப்.30

வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், (AEC&RI) TNAU, கோயம்புத்தூர், 28.9.24 (சனிக்கிழமை) அன்று மெகா விதைப்பந்து தயாரிப்பு நிகழ்ச்சியை நடத்தியது. இந்த மெகா நிகழ்வில் TNAUவின் சுமார் 1000 மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் கலந்து கொண்டு சுமார் 15000 க்கும் மேற்பட்ட விதை பந்துகளை தயார் செய்தனர்.



இரண்டு : ஒரு விகிதத்தில் சிவப்பு மண் மற்றும் மண்புழு உரம் ஆகியவற்றைக் கொண்டு விதைப் பந்து களை தயார் செய்வதற்காக கஸ்ஸட் மரம், சீத்தாப்பழம், பட்டு பருத்தி, இந்திய சிரிஸ், வேம்பு, பசிபிக் ரோஸ்வுட் மற்றும் ரெயின் ட்ரீ போன்ற விதைகள் தேர்ந்தெடுக்கப் பட்டன.

முனைவர் அ. ரவிராஜ் தனது வரவேற்பு உரையில், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் பல்வேறு சுற்றுச்சூழல் புத்துயிர் நடவடிக்கைகளிலும், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலை கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் முனைவர் வெ.கீதா லட்சுமியின் தலைமையில் மாபெரும் சுதந்திர வனம் அமைதல், திண்டுக்கல் மாவட்டத்தில் 6.5 லட்சம் மரங்களை நட்டு எலைட் உலக சாதனையில் இடம் பிடித்த பங்களிப்பையும் எடுத்துரைத்தார்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் முனைவர் வெ.கீதாலட்சுமி, விதைப்பந்து தயாரிப்பு மெகா நிகழ்ச்சிக்கு தலைமை வகித்து, இந்த மாபெரும் விதைப் பந்து தயாரிப்பு நிகழ்ச்சி சுற்றுச்சூழலைப் பாதுகாப்பது மற்றும் பாதுகாப்பது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும், மரங்கள் மற்றும் அது காலநிலை மாற்றத்தை எவ்வாறு சேமிக்கிறது, எதிர் காலத்தில், இது அடர்ந்த காடாக மாறும், பல உயிரினங்களுக்கு அடைக்கலம் தரும் என்று அவர் எடுத்துரைத்தார். Vn.Diamond* KCGF R. ரவிச்சந்திரன், சர்வதேச தலைவர் மற்றும் Vn.Diamond* KCGF T KANNAN, Intl மூத்த துணைத் தலைவர், சர்வதேச வாசவி கிளப் இந்நிகழ்ச்சியை சிறப்பித்து வாழ்த்துரை வழங்கினார்.

விதைப்பந்து தயாரிப்பு போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பேராசிரியர் முனைவர் வெ.கீதாலட்சுமி பரிசுகளை வழங்கினார். இந்த மெகா நிகழ்வை TNAUஇன் விதை மையம், Eco Club, Mason AGE Club, Food Club, Rotaract Club, NSS & சர்வதேச வாசவி 5* KCGF இன்டர்நேசனல், கோயம்புத்தூர் ஆகியவை இணைந்து ஏற்பாடு செய்தன. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் மற்றும் மாணவர்கள் சர்வதேச வாசவி கிளப் ஏற்பாடு செய்த ஒரு கோடி விதைப்பந்துகள் தயாரிப்பில் பங்கேற்று உலக சாதனை நிகழ்வில் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர்.



# கிசான் கோஸ்திஷ் – விவசாயிகள் கருத்தரங்கம் மற்றும் கண்காட்சி

சிவகங்கை, செப்.27

சிவகங்கை மாவட்டம், காளையார்கோவில் வட்டாரத்தில் வேளாண்மைத்துறை கீழ் இயங்கி வரும் (அட்மா) (2024-25) மாநில விரிவாக்க திட்டங்களுக்கான உறுதுணை சீரமைப்பு திட்டத்தின் மூலம் கிசான் கோஸ்திஷ் –விவசாயிகள் கருத்தரங்கம் மற்றும் கண்காட்சி புலியடிதம்பம் கிராமத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் புலியடிதம்மம் விவசாயிய பெருமக்கள் அனைவரும் கலந்து கொண்டனர். இக்கூட்டத்திற்கு விவசாய பெரு மக்கள் விளம்பர பாதகைகள் மூலம் வேளாண் தொழில் நுட்பங்கள் பற்றி பேரணி நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு தலைமை வகித்து சிவகங்கை மாவட்ட வேளாண்மை துணை இயக்குநர் (உழவர் பயிற்சி நிலையம்) ந.சண்முகஜெயந்தி கலந்து கொண்டு விவசாயிகளுக்கு வேளாண்மை சார்ந்த திட்டங்களான முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம், மத்திய மற்றும் மாநில அரசு திட்டங்கள், கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டம், ஒரு கிராமம் ஒரு பயிர் திட்டங்களை விவசாயிகளுக்கு விரிவாக எடுத்துரைத்தார். காளையார்கோவில் வேளாண்மை உதவி இயக்குநர் இரத்தின குமார் வேளாண்மைத் துறையில் செயல்படுத்தி கொண்டிருக்கும் திட்டங்கள் பற்றியும், திட்டங்களின் பயன்பாடுகள், வழிகாட்டு நெறிமுறைகள் மற்றும் தரிசு நிலங்களை விளைநிலங்களாக மாற்றி சாகுபடி பரப்பை அதிகப்படுத்துதல் மற்றும் வேளாண் துறையின் மூலம் விநியோகிக்கப்படும் அசோஸ்பைரில்லம், பாஸ்போபாக்டீரியா, திரவ பொட்டாஷ் இவைகளை பயன்படுத்தி அனைத்து பயிர்களுக்கும் விதை நேர்த்தி செய்வதன் மூலம் ஏற்படக்கூடிய பயன்பாடுகள் குறித்தும் மற்றும் பிரதம மந்தரி கௌரநிதி திட்டம் மற்றும் விவசாயி கடன் அட்டை வழங்குதல் போன்ற திட்டங்களை பற்றி விரிவாக விவசாயிகளுக்கு எடுத்து கூறினார்.

இப்பயிற்சியில் குன்றக்குடி, வேளாண் அறியில் நிலையம் முனைவர் செல்வராஜ் சமச்சீர் உரமிடல் மற்றும் இரசாயன உரங்கள் பயன்பாட்டினை குறைத்தல் குறித்த தொழில் நுட்பங்களான அனைத்து பயிர்களுக்கும் ஒருங்கிணைந்த முறையில்

சமச்சீர் உரமிடல் பற்றியும் இயற்கையான முறையில் பயிர் களுக்கு எவ்வாறு உரமிடதல் பற்றியும் பசுந்தாள் உரங்கள் விதை முதல் அறுவடை வரை உள்ள தொழில்நுட்பங்கள் பற்றியும் மற்றும் பசுந்தழை உரங்கள் வயலில் இடுவதால் இயற்கையான முறை யில் பயிர் சாகுபடி செய்வதையும், இலை வண்ண அட்டையை பயன்படுத்தி உரம் இடுவதையும், உயிர் உரங்கள் பயன்படுத்து வதால் ஏற்படும் நன்மைகள் பற்றியும், கரிம உரங்கள் மற்றும் மண்புழு உரங்கள் தயாரிக்கும் முறைகள் மற்றும் பூசா கேப்சூல், வேஸ்ட்டீ கம்போஸ்ட் தாயரிக்கும் முறைகள் மற்றும் பயன்பாடுகள் பற்றியும் பேரூட்ட சத்துகள் மற்றும் நுண்ணூட்ட சத்துகள் இயற்கை யான முறையில் இடுவதை பற்றியும் எடுத்து கூறினார்.

தோட்டகலை அலுவலர் ராம்பிரசாத் தோட்டக்கலை துறையில் உள்ள திட்டங்களான சொட்டு நீர் பாசனம் அமைத்தல், நிரந்தர பந்தல் காய்கறி சாகுபடி ஊக்குவிப்பு, பசுமை குடில் அமைத்தல் போன்ற திட்டங்களை எடுத்து கூறினார். மேலும் பட்டு வளர்ச்சி துறையில் உதவி ஆய்வாளர் ரமிஸ் ராஜா பட்டு வளர்ச்சி துறையில் உள்ள திட்டங்களான மல்பெரி வகைகளை நடவு செய்வதற்கு ஏக்கருக்கு ரூ.10500/-, பட்டு புழு வளர்ப்பு மனை அமைப்பதற்கு ரூ.1,20,000/- மானியமும் மற்றும் விவசாயி களுக்கு பட்டுப்புழு வளர்ப்பு உபகரணங்கள் மற்றும் மேம்படுத்தப்பட்ட பண்ணை உபகரணங்கள் வழங்குவதற்கு மானியம் ரூ.52500/- போன்ற திட்டங்களை எடுத்து கூறினார்.

வேளாண்மை பொறியியல் துறையில் உதவி செயற் பொறி யாளர் அருண்குமார் வேளாண்மை பொறியியல் துறையில் உள்ள திட்டங்களான வேளாண்மை இயந்திரமய மாக்குதல் திட்டத்தில் 40-50 சதவீதம் பவர் டில்லர் மற்றும் பவர் வீடர் மானியம் மற்றும் உழவர் வாடகை திட்டத்தின் மூலம் டிராக்டர் ரூ.500/- மணிக்கு இ வாடகை செயலி பயன்படுத்தி பெறலாம் என்றும் மற்றும் இதர திட்டங்களை எடுத்து கூறினார். கால்நடை துறையில் கால்நடை உதவி மருத்துவர் தினேஷ் கால்நடை துறையில் உள்ள திட்டங் களான 50 சதவீதம் மானியத்தில் தீவன வெட்டும் கருவி ரூ.32000/- மானியம், தேசிய செயற்கை முறை கருவுட்டல் திட்டத்தை பற்றியும் மற்றும் 40 எண்கள் கோழி குஞ்சு வழங்கும் திட்டம், இதர திட்டங்களை விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார். உதவி வேளாண்மை அலுவலர் சந்திரகேர், வேளாண் வணிகம் மற்றும் விற்பனை துறையில் உள்ள திட்டங்களை விவரிவாக விவசாயி களுக்கு எடுத்து கூறினார். காளையார்கோவில் வேளாண்அலுவலர் தைப்பத்துல் ஆசிபா பிரதம மந்திரி நுண்ணீர் பாசன திட்டத்தின் மூலம் சிறு/குறு விவசாயிகளுக்கு 100 சதவீதம் மானியத்தில் தெளிப்பு நீர்ப்பாசனம் மற்றும் மழைத்தூவான் வழங்கப்பட்டு வருகிறது என்பதனை எடுத்துக்கூறினார்.

காளையார்கோவில் வட்டார தொழில்நுட்ப மேலாளர் ஜோதி அட்மாதிட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் விவசாயிகள் பயிற்சிகள் சம்பந்தமான உள் மற்றும் வெளிமாநில, மாவட்ட அளவிலான பட்டறிவு, கண்டுணர்வு பயிற்சிகள் செயல்விளக்கத் திடல்கள் அமைத்தல் தொடர்பாக திட்டங்களை பற்றி விவசாயிகளுக்கு விரிவான முறையில் எடுத்துக்கூறினார். உழவர் செயலி பயன் படுத்தும் முறைகள் பற்றியும் மற்றும் அதில் உள்ள 24 முகப்பு விபரம் பற்றி விரிவாக எடுத்து கூறினார். இயற்கை முறையில் விவசாயம் செய்வது மண்வளத்தை பாதுகாத்தல், இயற்கை உர கரைசலான ஜீவாமிர்தம், கனஜீவாமிர்தம் தயாரித்தல் மற்றும் அதன் பயன்பாடுகள் பற்றி எடுத்துக் கூறினார். மேலும் உதவி வேளாண்மை அலுவலர் சரவணகுமாரி நெல் பயிரில் வறட்சி காலங்களில் விதை முளைப்பு திறனை அதிகரிக்க (1 சதவீதம் பொட்டாசியம் குளோரைடு) பயன்படுத்தி விதை கடினமாக்குதல் செயல்விளக்கம் விவசாயிகளுக்கு செய்து காண்பித்தார். உதவி தொழில்நுட்ப மேலாளர் காளிஸ்வரி பயிற்சியில் கலந்து கொண்டு பயிற்சிக்கான ஏற்பாடுகள் செய்தார். பாஸ்கரன் துணை வேளாண்மை அலுவலர் விவசாயிகளுக்கு நன்றி தெரிவித்தார்.



# சூளகிரியில் வட்டார விவசாயிகள் ஆலோசனை குழு கூட்டம் நடைபெற்றது



கிருஷ்ணகிரி, செப்,30

கிருஷ்ணகிரி மாவட்டம், சூளகிரி வட்டார வேளாண்மை துறை அட்மா திட்டத்தின் வட்டார தொழில் நுட்ப குழு மற்றும் வட்டார விவசாயிகள் ஆலோசனை குழு கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு வேளாண்மை உதவி இயக்குநரும், வட்டார தொழில் நுட்ப குழுவின் ஒருங்கிணைப்பாளருமான ஜான் லூர்து சேவியர் தலைமை தாங்கினார். வட்டார விவசாயிகள் ஆலோசனை குழு தலைவர் வெங்கடேசன் சகோதர துறை அலுவலர்கள் மற்றும் உறுப்பினர்களை வரவேற்று பேசினார்.

இக்கூட்டத்தில் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டம் செயல்படுத்தப்படும் ஊராட்சிக்குட் பட்ட கிராமங்களில் பயிற்சிகள் நடத்துவது மற்றும் பட்டறிவு பயணங்களுக்கு விவசாயிகளை அழைத்து செல்வது குறித்தும் தீர்மானிக்கப்பட்டது. வட்டார தொழில் நுட்ப குழு ஒருங் கிணைப்பாளர் ஜான் லூர்து சேவியர் கூறியதாவது, தற்போது வேளாண்மை துறையில் செயல்படுத்தப்படும் திட்டங்கள், மானியங்கள்,சொட்டுநீர் பாசனத்தின் பயன்கள் மற்றும் பயிர் காப்பீடு திட்டத்தின் அவசியம் குறித்து விளக்கி கூறினார்.

மேலும் சகோதர துறை அலுவலர்கள் ராஜேஷ் (கால்நடை பராமரிப்பு துறை) திருமுருகன் (தோட்டக்கலை துறை) கல்யாண சுந்தரம் (பட்டுவளர்ச்சி துறை) ரமேஷ் (வேளாண் விற்பனை மற்றும் வணிக துறை) பழனி (வேளாண்மை துணை அலுவலர்) ஆகியோர் கலந்து கொண்டு துறை சார்ந்த திட்டங்கள், மானியங்கள் குறித்து விளக்கி கூறினார்கள்.

இக்கூட்டத்தில் கலந்து கொண்ட ஆலோசனை குழு உறுப்பினர்களின் சந்தேகங்களுக்கு அத்துறை சார்ந்த அலுவலர்கள் திட்டங்கள் மற்றும் மானியங்கள் குறித்து விளக்க மளித்தனர். இக்கூட்டத்திற்க்கான ஏற்பாடுகளை உதவி தொழில் நுட்ப மேலாளர்கள் கா.ம.முஹம்மது ரஃபி மற்றும் பி.பழனிச் சாமி ஆகியோர் செய்திருந்தனர்.


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை
இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது.
அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# இயற்கை வேலிகளும் உயிர் வேலிகளும்

வளர்ந்து கொண்டிருக்கும் உயிருள்ளச் செடி மற்றும் கொடிகளைக் கொண்ட வேலியை நாம் உயிர் வேலி என்று குறிப்பிடுவோம். காய்ந்த இயற்கை பொருட்களான மூங்கில், தண்டுகள், ஓலை பொருட்களான பனை, தேங்காய் மற்றும் பலவற்றால் அமைக்கப்படும் வேலிகளை இயற்கை வேலிகள் என குறிப்பிடுவோம்.

உயிர்வேலி (live fence) எனப்படுவது செடி, குற்றுச்செடி, கொடி, மரங்கள் ஆகியவற்றால் எழுப்பப்பட்ட வேலி ஆகும். இவ்வுயிர் வேலியை இயற்கைக்கு எதிரான, உயிர் பன்மையை சிதைக்கும் இரும்புக் கம்பி, முள் கம்பி, வலை, கற்சுவர் இவற்றுக்கு மாற்றாக வீடு மற்றும் பண்ணைகளுக்கு பாதுகாப்பு அரணாக அமைக்கப்படுகின்றது. உயிர் தாவரங்களால் அமைக்கப்படுவதாலும், பல உயிரிகள் இதில் வாழ்வதாலும் இவ்வேலி உயிர் வேலி என அழைக்கப்படுகிறது. பழந்தமிழரின் வேளாண்மையில் உயிர் வேலிகளே பாதுகாப்புக்காக அமைக்கப்பட்டன. இவ்வகை வேலிகள் உயிரிப் பல்வகைமைப் பெருக்கத்திற்கும் பொருளாதார மேம்பாட்டிற்கும் அடிப்படையாக அமைகிறது. நுண்ணுயிரிகளும், மலர் தாவரங்கள், காய்கனி செடிகள், கீரை வகைகள், போன்ற தாவரங்களும், பறவைகள், ஊர்வன, பாலூட்டிகள் உள்ளிட்ட விலங்குகளும் வாழ்வதற்கு ஏற்ற இடமாக உயிர்வேலி அமைகிறது. இதன் மூலம் உணவு சங்கிலி, உணவு வலை போன்றச்சுற்றுசூழல் மேம்பாட்டுக் காரணிகளை பேணுவதுடன் உறுதியான இயற்கைப் பாதுகாப்பையும் வழங்குவது இதன் சிறப்பாகும்.

ஒருவரின் வேலியை வைத்து அவரின் மனதைப் புரிந்து கொள்ளலாம். இக்காலங்களில், மிகுந்த செலவில் வேலிகள் அமைத்து, செடிகளும், பறவைகளும் வாழும் விலை மதிப்பான இடத்தை இழக்கிறோம். வேலிகள் அமைக்க வெவ்வேறு பொருட்களையும், முறைகளையும் நம் கிராமங்களை ஒரு முறை சுற்றினால் புரிந்து கொள்ளலாம். தலைமுறைகள் தாண்டி வாழும் இவ்வியற்கை வேலிகள், தனிப்பட்ட வரவேற்கும் பண்புடையது. பெரும் சுவர்கள் எழுப்பி ஆட்களை வெளியில் நிறுத்தாமல், விலங்குகளிடமிருந்து மட்டும் பாதுகாப்பு அளிக்கும் வகையில் அமையும். வேலிகளில் பயன்படுத்திய பொருட்களை வைத்தே அந்த கிராமத்திலுள்ள வளங்களை நாம் அறியலாம். துருப்பிடிக்காத, கெட்டுப்போகாத வேலிகளைச் சற்றுக் கற்பனை செய்து பாருங்கள். அவை சில உயிரினங்களைக் கொண்ட சிறிய உயிர்க்கோள அமைப்பாகச் செயல்படுகிறது.

வளர்ந்து கொண்டிருக்கும் உயிருள்ளச் செடி மற்றும் கொடிகளைக் கொண்ட வேலியை நாம் உயிர்வேலி என்று குறிப்பிடுவோம். காய்ந்த இயற்கை பொருட்களான மூங்கில், தண்டுகள், ஓலை பொருட்களான பனை, தேங்காய் மற்றும் பலவற்றால் அமைக்கப்படும் வேலிகளை இயற்கை வேலிகள் என குறிப்பிடுவோம். இயற்கை மற்றும் உயிர்வேலிகள் பல எளிய முறையில் செய்யக்கூடும்.



பல தாவர வகைகள் – உயிருள்ள அல்லது காய்ந்த நிலையில் வேலிகளுக்கு உபயோகமாகின்றன. இவை விலங்குகள் மேய்வதிலிருந்தும், வெளியாட்கள் உள்ளே நுழைவதில் இருந்தும் பாதுகாப்பு அளிக்கிறது. இவை விலை குறைவானதாகவும், பார்வைக்கு அழகாகவும், காற்றுத் தடுப்பானாகவும் இருக்கிறது. பல காரணங்களைக் கருத்தில் வைத்து, தாவர வகைகள் தேர்ந்தெடுக்கப்படுகின்றன. மாடுகளும், ஆடுகளும் தீண்டாத செடிகளை வேலிகளில் வைப்பது வழக்கம். மேலும், தண்ணீர் பாதுகாப்பிற்கும், மண் அரிப்பை தடுப்பதற்கும் வேலிகள் முக்கிய பங்களிக்கின்றன. வேலிகள் தண்ணீர் ஆவியாவதை தடுக்கிறது, நுண்பருவ நிலையை (Microclimate) ஏற்படுத்துகிறது. அருகில் கிடைக்கும் பொருட்களை வைத்து, இயற்கை வேலிகள் அமைப்பது மிகவும் எளிது. தணலில் இயற்கை வேலியை, இயற்கைக் கட்டுமானம் அமைக்கும் போது மூங்கில் அறுவடை செய்யும் போது கிடைத்த கிளைகளை வைத்தே செய்து முடித்தோம்.



## வாழை இலைகளால் வேலி

முட்களைக் கொண்ட தண்டுகளுடைய கிளுவை மரங்களை எல்லைப் பகுதியில் நெருக்கமாக நட்டி, விலங்குகள் புகாதவாறு தடுப்பு அமைத்திட முடியும். பிளந்த மூங்கில்கள், மஞ்சம் புல், உன்னிச் செடி, ஓலை பொருட்களான தேங்காய், பனை ஆகியவற்றைப் பின்னித்தட்டிகள் செய்து வேலிகள் அமைப்பர். இவையெல்லாம் ‘படல்’ என அழைக்கப்படும். மூங்கில் தட்டிகளைப் பின்னிவேலி அமைத்து, பிறகு அதில் பசுஞ்சாணம் மெழுகப்படும். பல இடங்களில், சிறிய குச்சிகள் கொண்டும், பனை மட்டைகளை ஒட்டிவைத்தும் வேலிகள் அமைப்பர்.

இன்னும் சில இடங்களில், வாழை இலைகள் கொண்டு சுவாரசியமாக வேலிகள் அமைத்துள்ளனர். உயிர் வேலிகள் வளர்ப்பது எளிது, பொறுமை மட்டுமே தேவை. வரம்பில்லாமல் உணவு, மருந்து மற்றும் தீவனம் வழங்கும் மூலம் தான் உயிர் வேலி. பல மாவட்டங்களில் எந்த செலவுமின்றி ஒரு வருடத்திலே உருவாக்கிய உயிர்வேலியைக் காணலாம். மிகக் குறைந்த அளவிலான மழைப் பொழிவிலே இது வளர்ச்சியடைந்து வேலியாக மாறியது. இங்கே உள்ள செடிகள் ஓணான் தட்டை (நீர்ப்பூவரசு அல்லது நெய்வேலிக் காட்டாமணக்கு) மற்றும் நித்தியக் கல்யாணி ஆகும். சந்தையில் கிடைக்கும் நிறுவனப் பொருட்களை விட உயிர் வேலிக்கு ஆயுள் அதிகம். வேலியின் ஆயுள் வேலியில் நட்ம் மரம், செடிகளைப் பொறுத்து மாறுபடும். உயிர்வேலிக்கு வளர்க்கும் மரங்களை தகுந்த பருவத்தில் அதன் கிளைகளை வெட்டி வேறு இடத்திலும் நட்டி வேலி உருவாக்கலாம். கிளைகளைக் கழித்தபின் அம்மரம் திரும்ப துளிர்த்து வளர்ந்துவிடும்.

பொதுவாக கிளுவை, கள்ளி போன்ற முள்கொண்ட செடிகள் வேலியாக அதிகமாக இருப்பதைப் பார்க்கலாம். ஆடாதோடை, செம்பருத்தி போன்ற ஆடு, மாடு தீண்டாத செடிகள் அடர்ந்து வளரும். இவற்றை மற்றவர் பார்வையை தடுக்கும்படி வேலியாக அமைக்கலாம். அடர்ந்த படரும் கொடிகளான பூசணி, வேலியில் படரவிட மிகவும் சிறந்த தாவரம். வெட்டிவேர், கற்றாழை போன்ற மருத்துவ குணம் வாய்ந்த தாவரங்கள் கூட வேலிகளில் நடலாம். வெட்டிவேர் போன்ற செடிகள் மாசுபட்ட சூழலில் வளர்ந்து, நிலத்திலுள்ள நஞ்சுகளை சுத்திகரிக்கும். இந்த அடர்ந்த தாவரம் சிறிய விலங்குகளோ, பாம்புகளோ கூட உள்நுழைய அனுமதிக்காது.

மண்ணின் வளத்தை அதிகரிக்குமாறு, அகத்தி, கிளிரிசிடியா போன்ற மரங்களை வேலியில் வைப்பது நல்லது. அவை மண்ணில் நைட்ரஜனை நிலைப்படுத்துவன. மேலும் தீவனமாகவும் பயன் படுகிறது. இத்தாவரங்கள் வீசும் காற்றைக் கட்டுபடுத்துவதால் நிலத்திலுள்ள ஈரத்தன்மை வெளியேறாது தடுக்கவும் செய்கிறது. காட்டாமணக்கு வேலியில் நட்டினால், பூச்சிகளை தன்வயம் ஈர்த்து, மற்ற செடிகளுக்குப் பூச்சி வராமல் தடுக்கும். களாக்காய் என அழைக்கப்படும் குத்துச் செடியின் காய் லாபகரமானது. இதன் வேலி பல பறவைகள், விலங்குகளை ஈர்த்து, தனிச் சுற்றுச்சூழலை உருவாக்கும். இரும்புக் கம்பி வேலிகளை விட அதிகம் நெருக்கம் வாய்ந்தது. அதைத்தாண்டி ஆட்களும் விலங்களும் எளிதில் நுழைய முடியாது.

சவுண்டல், மலை வேம்பு, சவுக்கு போன்ற உயரமாக வளரக்கூடிய மரங்கள் காற்றுத் தடுப்பானாக செயல்படுவதால் மண்ணிலிருந்து நீர் ஆவியாதலைத் தடுக்கும்.



நொச்சி, கழற்சிக்காய், மருதாணி போன்ற செடிகளும் பிரண்டை, முடக்கத்தான் போன்ற கொடிகளும் மருத்துவ குணம் வாய்ந்தவை. பனை, கொடுக்காப்புளி போன்ற மரங்கள் மண் அரிப்பை தடுக்கும்.

இவ்வாறு 67 தாவர வகைகள் வேலி அமைப்பிற்கானவை எனக் கண்டறியப்பட்டுள்ளன.

ஒரு உயிர்வேலி அழிந்தால், அந்த இடத்தில் எதிர்மறையாக பல்வேறு விளைவுகள் வரும். சுற்றுசூழலிற்கு இணக்கமான வேலிகள் அமைப்பது நம் கையில் தான் உள்ளது.

கட்டுரை ஆசிரியர்கள் : **முனைவர் சு.இரா.பத்மா, உதவிப் பேராசிரியர் (வேளாண் விரிவாக்கம்) மற்றும் இரா.அருண்குமார், முனைவர் பட்டப்படிப்பு மாணவர் (வேளாண் விரிவாக்கக் கல்வி) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர். மின்னஞ்சல் :** padmasr@tnau.ac.in.

# சத்தியமங்கலத்தில் டிஜிட்டல் பண பரிவர்த்தனை வசதி அறிமுகம்

ஈரோடு, செப்,30

ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் (பொ), கு.கற்பகம் தெரிவித்ததாவது, வட்டார வேளாண் விரிவாக்க மையம் மற்றும் துணை வேளாண் விரிவாக்க மையங்களில் விவசாயிகளுக்கு தேவையான இடுபொருட்களான விதை நெல், உளுந்து, மக்காசோளம், நிலக் கடலை, உயிர் உரங்கள், நுண்ணூட்ட உரங்கள், ஜிங்க் சல்பேட், டிரைக்கோடெர்மாவிரிடி, சூடோமோனாஸ், மெட்டாரைசியம் உள்ளிட்ட அணைத்து இடுபொருட்களும் விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்கப்படுகிறது. இதற்கு முன் விவசாயிகள் வாங்கும் இடுபொருட்களுக்கு ரொக்கமாக மட்டுமே பணம் செலுத்தும் முறை இருந்து வந்தது. ஆனால் தற்சமயம் மாறி வரும் சூழலுக்கு ஏற்ப விவசாயிகள் தாங்கள் வாங்கும் இடுபொருட்களுக்கு டிஜிட்டல் முறையிலான ஏடிஎம் கார்டு, டெபிட் கார்டு, கிரிடிட் கார்டு, நெட் பேங்கிங், போன் பே,கூகுல் பே, பேடிஎம் போன்ற அனைத்து மின்னனு பரிவர்த்தனைகள் மூலம் இடுபொருட்களுக்கு பணம் செலுத்தலாம். மின்னனு பரிவர்த்தனை மேற்கொள்வதற்கு தேவையான அனைத்து வசதிகளும் சத்திய மங்கலம் வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தில் ஏற்படுத்தப் பட்டுள்ளது. இந்த வாய்ப்பினை விவசாயிகள் பயன்படுத்தி பயனடையுமாறு அவர் தெரிவித்தார்.


நானோ யூரியா பிளஸ்
20 சதவீதம்
தழைச்சத்து கொண்ட நானோ திரவம்
500 மிலி
ரூ.225/-
IFFCO
NANO
UREA
PLUS
இலைவழி
தெளிப்பு
1லி. நீருக்கு
5 மி.லி
ஒரு ஏக்கருக்கு, ஒரு தெளிப்பிற்கு 500 மி.லி
முதல் தெளிப்பு - முக்கிய வளர்ச்சி
பருவமான கிளைப்பு | தூர்விடும் தருவாய்
இரண்டாம் தெளிப்பு - பூக்கும் பருவத்திற்கு முன்
அனைத்து பயிர்களுக்கும் ஏற்றது.